[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 ஏப்ரல் 28

வாரியத்தால் எடுத்துக்கொள்ளப்பட ஏதுவாக இருக்கும். தடை ஏற்படாது. தடை ஏற்படுத்தக்கூடாது என்று சம்பந்தப் பட்டவர்களுக்கு, அவர்களுடைய கோரிக்கைகள் உரிய முறை யில் கவனிக்கப்படும் என்று ஆணை மூலமாக தகவல் தெரிவிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருந்தன்மையாக அந்த இடத்தில் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கு நன்றி. அங்கே அவர்கள் மாற்றுக் கருத்துத் தெரிவித்தாலோ அல்லது நீதிமன்றம் சென்று தடை ஆணை வாங்கினாலோ திட்டம் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற் படும். அதைத் தடுக்கக்கூடிய சூழ்நிலையை மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் இங்கே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவருக்கு நான் சட்டமன்றத்தில் கூறிய பதிலையே அவர்களுக்கு வாக்குறுதி யாக அவர் கூறலாம். அந்த அடிப்படையில் உரிய நடவடிக்கை யை இந்த அரசு எடுக்கும்.

4. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் சார்பாக அக்குழுவின் கீழ்க்கண்ட 29-வது மற்றும் 30-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன் :

(அ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் வனம் மற்றும் மீன்வளத்துறை தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

(ஆ) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981–82 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் (வணிகம்) போக்குவரத்துத் துறை பற்றிய பத்திகள் மீதான மேற்படி குழுவின் முப்பதாவது அறிக்கை.

5. வரவு-செலவுத் திட்டம், 1986–87, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 1—நிலவரித் துறை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர் மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,87,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."